டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளாக எம்.எம்.டி.ஏ. பல்வேறு கேள்விகளைக் கேட்டு, இது இன்னும் நிலுவையில் உள்ளது. நன்றே செய்யின் அன்றே செய்க என்று செயல்படும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் இந்த ஒப்புதலை விரைவில் வழங்கிட மாண்புமிகு அமைச்சரவர்கள் எம்.எம்.டி.ஏ.-க்கு ஆலோசனை வழங்கி, துரித நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மனுதாரர் சங்கத்திடமிருந்து விண்ணப்பிக்கப்பட்ட எல்லா நிலங்களுடைய உரிமை பற்றிய விவரங்கள், பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் போன்ற வருவாய்த் துறை ஆவணங்கள், நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டத்திற்கு விலக்கு அளிக்கப்பட்ட சான்றிதழ், கால்வாயின் குறுக்கே பாலம் கட்டுவதற்கான மறுப்பின்மைச் சான்றிதழ் போன்ற பல்வேறு விவரங்களைக் கோரியிருந்தது. 16-9-1993 அன்று மனுதாரர் சங்கம் சில விவரங்களை அளித்தது. ஆனால் அனைத்து விவரங்களையும் மேற்கண்ட சங்கம் அளிக்கவில்லை. எனவே மீண்டும் தேவையான அனைத்து விவரங்களையும் அளிக்குமாறு 24-11-1993 அன்று மேற்படி சங்கத்திடம் கோரப்பட்டது. மேற்படி விவரங்கள் சங்கத்தால் இன்னும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்குத் தரப்படவில்லை. எனவே அது பற்றிய விவரங்கள் தரப்பட்டவுடன் அவர்களுக்கு உரிய அங்கீகாரம், ஒப்புதல், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினுடைய சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வழங்கப்படும் என்பதையும், எனவே இதிலே குறுக்கிட்டு எந்தவிதமான ஆலோசனையும் கூற வேண்டிய அவசியம் எழவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 331, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

331–

மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரியில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் ஏற்படுத்துதல்.

* **26581–திருமதி கவிநிலவு தர்மராஜ் :**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

[*1994 ஏப்ரல் 21*

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரியில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரியில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியிலே 3 இலட்சம் மக்கள் இருக்கிற காரணத்தால், அது ஈரோடு தாலுக்காவுக்கு உட்பட்ட பகுதியாக அமைந்திருப்பதனால், வீட்டு வசதிச் சங்கம் மொடக்குறிச்சிக்கு என்று தனியாக அமைத்துக் கொடுப்பார்களேயானால், உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம்--இது அத்தனையும் பாமரர்களுக்கும், ஏழைகளுக்கும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொன்னான அரசின் நோக்கம் நிறைவேறும். அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்து, எந்த அலுவலகம் என்றாலும் ஈரோட்டுக்கு வர வேண்டுமென்ற நிலையை மாற்றி, மொடக்குறிச்சி தொகுதியில் இருக்கக்கூடிய 3 இலட்சம் மக்கள் பயன்பெறுகிற விதத்திலே வீட்டு வசதிச் சங்கம் ஒன்றை மொடக்குறிச்சி தொகுதியினுடைய நடுநாயகமாக விளங்கிக் கொண்டிருக்கிற சிவகிரியில் அமைத்துத்தர. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது அவருக்குப் பக்கத்தில் நடக்கிறவர்கள் குனிந்து நடக்க வேண்டும். ஒருவர் பேசிக் கொண்டிருக்கிறார், 5, 6 பேர்கள் போகிறீர்கள், வருகிறீர்கள். இதை அமைச்சர்களுடைய டபேதார்களுக்கும் நீங்கள் கொஞ்சம் சொல்லி வைக்க வேண்டும், கொஞ்சம் குனிந்துகொண்டே போக வேண்டுமென்று.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்து, வீட்டு வசதிச் சங்கம் ஒன்றை சிவகிரியில் அமைத்துத்தர வருகிற நிதி ஆண்டிலாவது நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசு புதிதாக கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் ஏற்படுத்துவதற்கு பின்பற்றத்தக்க வழிகாட்டி நெறிமுறைகள் குறித்து

1994 ஏப்ரல் 21]

அரசாணை பல்வகை எண்.10, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 3–1–1985-ல் ஓர் ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. அவ்வழிகாட்டி நெறி முறைகளில் நிலையான வருமானம் உள்ளவர்கள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், தொழில் முறை மற்றும் வணிகத் துறை நிறுவனங்கள், பொது நிறுவனங்கள், அரசுத் துறை நிறுவனங்கள், கம்பெனிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் போன்ற நிறுவனங்களில் பணி புரிபவர்கள் மற்றும் வருமான வரி செலுத்தக் கூடியவர்கள் ஆகியோர்கள் தாங்களாகவே புதிதாக ஏற்படுத்த இருக்கும் சங்கத்திற்கு நிதி உதவி செய்து கொள்வதாக இருப்பின், அத்தகைய புதிய வீட்டு வசதி சங்கம் ஏற்படுத்துவது குறித்து கருத்தில் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அரசிடமிருந்து எந்தவிதமான நிதி உதவியும் கோராமல், தாங்களாக தங்களுடைய கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு நிதி உதவியை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்ற கருத்துருவோடு சிவகிரி பகுதியிலிருந்து கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை இதுவரை வரவில்லை. அப்படி எதுவும் வந்தால் அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியிலே இருக்கிற அத்துணை வணிகப் பெருமக்களும், விவசாயப் பெருங்குடி மக்களும்.....

முற்பகல் *11–00*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மற்றும் அங்கே இருக்கிற பொதுமக்கள் அத்தனைபேரும் ஈரோடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தை அணுகி தங்களுடைய மூலதனங்களைப் பெருவாரியாகச் செலுத்தியிருக்கின்ற காரணத்தாலும், ஈரோடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் நிர்வாக அமைப்பிலே இருந்து தனியாக ஒரு கிளையைப் பிரித்து சிவகிரியில் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு, போதுமான அளவுக்கு நிதி ஆதாரங்களைத் தருவதற்கும், வீட்டு வசதிச் சங்கத்தைக் கட்டித் தருவதற்குரிய இடத்தை வழங்குவதற்கும், அதற்குரிய நிர்வாக அமைப்புக்கான அத்தனை உதவிகளையும் செய்வதற்கும் பொதுமக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டி, ஈரோடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தினுடைய ஒரு

கிளையை எங்களுடைய சிவகிரியிலே நிறுவுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தினுடைய கிளை ஒன்றை சிவகிரியில் அமைப்பதற்கு எந்தவிதமான சாத்தியக்கூறுகளும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதையும், சிவகிரியில் இருக்கிற பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து, ஏற்கெனவே நான் குறிப்பிட்டபடி, அரசாணை (பல்வகை) எண் 10, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 3-1-1985-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அங்கே ஒரு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் அமைக்க முன்வருவார்களேயானால் அவர்களுடைய கோரிக்கை அரசால் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 332, திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

332–

மலைவாழ் மக்கள் செம்மறி ஆடுகள் வளர்க்க அரசு கடனுதவி வழங்குதல்.

24909– **திருமதி அ. தி. சரஸ்வதி:*

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மலைப் பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்கள் செம்மறி ஆடுகள் வளர்க்க அரசு கடனுதவி அளிக்குமா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக செம்மறியாடு அலகுகள் அரசு மான்யம் மற்றும் வங்கிக் கடன் உதவியுடன் வழங்கப்படுகின்றன.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் 100 ஆண்டு முதல்வர், மண்ணுள்ளவரை மங்காப் புகழ்பெறும் மக்கள்நல் திலகமாம் நம்மையெல்லாம் வாழவைக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில், தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் வளர்ச்சித் திட்டம், எந்தெந்தப் பகுதியில் செயல்படுகின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் அறிய விரும்புகிறேன்.